# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில்
## 24.04.2009 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

நாம் நமது அன்றாட வாழ்வில் ஒரு சொல்லை பலமுறை கேட்டுள்ளோம்; பயன்படுத்தவும் செய்கிறோம். அச்சொல் **லாபம் - பயன்** என்பதாகும்.

வியாபாரிகளைப் பொருத்தமட்டில் இச்சொல் அவர்கள் வட்டத்தில் பிரபலமான சொல்லாகும். சிறு வியாபாரியாக இருந்தாலும் சரி; அல்லது பெரும் இலட்சாதிபதியாக இருந்தாலும் சரி அவரது வியாபாரக் கிளை முழு உலகிலும் பரவியிருந்தாலும் சரி அவர்கள் அனைவரும் எவ்வாறு அதிகமாக லாபம் சம்பாதிக்கலாம் என்ற யோசனையிலேயே மூழ்கியிருக்கின்றனர். இதற்காக அவர்கள் அனுமதிக்கப்பட்ட எல்லா வழிகளையும் பயன்படுத்துகின்றனர். பல நேரங்களில் இக்காலத்தில் அனுமதியில்லாத வழிகளிலும் லாபம் பெற முயன்று கொண்டேதான் இருக்கின்றனர்.

எனவே, ஒரு பொதுவான மனிதர். அவருக்கு வியாபாரத்துடன் எந்த தொடர்பும் இல்லை என்றாலும்கூட தனது பயனிற்காக அவர் முயன்று கொண்டேதான் இருக்கிறார். எவ்வாறு பொருள்களிலிருந்து பயன் பெறலாம் என்று யோசிக்கின்றார். அதுவே உலக விஷயங்களில் இச்சொல்லின் உபயோகம் ஆகும். ஆனால், மார்க்க மற்றும் ஆன்மீக உலகிலும் இந்த **நஃபஅ** - லாபம், பயன் என்ற சொல் அதிகம் உபயோகிக்கப்படுகிறது.

இது தொடர்பாக ஹதீஸ்கள் மற்றும் திருக்குர்ஆனின் ஒளியில் விளக்குவேன். இச்சொல் அரபு அகராதிப் பொருளைக் கூறுகிறேன். ஏனெனில், அரபியிலும் இச்சொல்லின் உபயோகம் அதிகமாகவே உள்ளது.

**'நஃபஅ'** என்றால் ஒன்றிற்கு அல்லது ஒரு மனிதனுக்கு பயன்படுதல். மனிதனுக்கு ஒரு பொருள் கிடைப்பது அந்த பொருள் பயன்படுத்தக்கதாக ஆவது ஒரு பொருளை ஒருவரின் லாபத்திற்கு காரணமாக ஆக்குதல் என்று பொருள்.

சில ஹதீஸ்களின் அடிப்படையில் ஒரு மூஃமினின் அடையாளம் இதுவாகும். அவர் அடுத்தவருக்கு பயன் தருபவராக இருக்கிறார்.

முப்ரிதாத் என்ற அகாரதியில் எழுதப்பட்டுள்ளது. அந்நஃபவு என்பது ஒன்றின் நன்மையை பெறுவதற்காக நாம் நாடுகின்ற ஒரு பொருள் என்பதாகும். அல்லது நன்மையைப் பெறுவதற்கான ஊடகமாக ஒன்றை ஆக்குவது என்பதாகும். மேலும் ஒரு பொருளில் முழு இலக்கையும் பெறும் வழி என்றும் எழுதப்பட்டுள்ளது.

லிஸானுல் அரப் என்ற அகராதியில் எழுதப்பட்டுள்ளது. அன்னாஃபிஃ என்பது அல்லாஹ்வுடைய திருநாமங்களுள் ஒன்றாகும். அதன் பொருள், படைப்பினங்களுக்கு தான் நாடும் அளவுக்கு நன்மையை அடையச் செய்பவன் என்பதாகும். ஏனெனில் அவனே ஒவ்வொரு நன்மை-தீமை, இலாபம்-நஷ்டம் ஆகியவற்றை உருவாக்குபவன் ஆவான்.

இந்த அகராதி பொருள்களுக்குப் பிறகு நான் ஹதீஸின் ஒளியில் இச்சொல்லை விளக்குவேன். ஒரு மூஃமினுக்கு இச்சொல் பற்றி நன்றாக தெரிந்திருக்க வேண்டும். ஒரு மூஃமின் உலகவாதிகளைப் போன்று தமது சுயலாபத்தை மட்டுமே யோசிப்பதில்லை. மாறாக, மற்றவரின் நலன் குறித்தும் யோசிக்கிறார்; யோசிக்கவும் வேண்டும்.

குர்ஆன் கரீமும், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் வழிகாட்டல்களான ஹதீஸ்களும் நமக்கு மேற்கண்ட கருத்தையே விளக்குகின்றன. பயன் தருவதற்கு பல்வேறு வழிமுறைகளை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

இது சம்பந்தமாக சில ஹதீஸ்களை எடுத்து வைக்கிறேன். அதிலிருந்து மற்றவருக்கு பயன் அளிப்பது குறித்து என்ன வழிகாட்டியுள்ளார்கள் என்று தெரிந்து கொள்ளலாம்.

ஸயீத் பின் அபீ வர்தா தனது தந்தையிடமிருந்தும், அவர் தனது பாட்டனாரிடம் இருந்தும் அறிவிக்கின்றார். அவர்கள், **ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்** கூறியதாக அறிவிக்கின்றார்கள்:

ஸதகா தருவது ஒவ்வொரு மூஃமினுக்கும் அவசியமாகும். அல்லாஹ்வின் தூதர் அவர்களே! ஒருவருக்கு அதற்கான சக்தி இல்லா விட்டால் என்ன செய்வது? என்று மக்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் கேட்டனர். அவர் தனது கைகளால் உழைக்க வேண்டும். உழைத்து, தானும் பயனடைந்து ஸதகாவும் கொடுக்க வேண்டும் என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அம்மனிதரால் அதற்கும் முடியா விட்டால் என்ன செய்வது? என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் கேட்கப்பட்டபோது, தேவையுடையவர்; துன்பத்தில் சிக்கியிருப்போருக்கு உதவி செய்யட்டும் என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அம்மனிதரால் அதுவும் செய்ய முடியாவிட்டால் என்ன செய்வது? என்று கேட்கப்பட்டபோது, அவர் நல்ல விஷயங்களை அமல் செய்து, தீய விஷயங்களிலிருந்து விலகி இருக்கட்டும். அதுவே அவருக்கு ஸதகாவாகும் என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

பிறகு இன்னொரு ஹதீஸில் ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். **ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

ஒரு மனிதர் வழியில் ஒரு மரத்தின் கிளை படர்ந்து நிற்பதைப் பார்த்து விட்டு, அல்லாஹ்வின் மீது ஆணை! நான் இம்மரத்தை வழியிலிருந்து அகற்றி விடுவேன். அதனால் முஸ்லிம்களுக்கு கஷ்டம் உண்டாகாமல் இருக்கும் என்றார். அவரை இறைவன் சொர்க்கத்தில் நுழையச் செய்தான்.

பிறகு இன்னொரு ரிவாயத்தில் வருகின்றது. ஹஸ்ரத் அபூஸயீத் குத்ரி அறிவிக்கின்றார்கள். **ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

ஒரு மனிதருக்கு அல்லாஹ் அறிவை வழங்கியுள்ளான். அந்த அறிவின் மூலம் அவர் மார்க்க வி-யத்திலும், மக்களுக்கும் நன்மை செய்திருக்க முடியும். ஆனால் அவர் அதனை செய்யவில்லை எனில் கியாமத் நாளில் அவரை நரகத்தின் நெருப்புக் கங்காக ஆக்கி விடுவான்.

எனவே ஒரு மூஃமினுக்கு தனது ஒரு பொருளை அதிகரிப்பது, உலகாதாய இலாபம் சம்பாதிப்பது, அவருக்கு இலாபம் தரக்கூடியதன்று. மாறாக, அசல் இலாபம் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதன் மூலம் கிடைக்கிறது. அது நிரந்தரமானது. அக்கணக்கு ஏடு மறு உலகில் திறக்கப்படுகிறது. இந்த ஹதீஸில் பயன் பெறுவதற்கு எல்லாவற்றிலும் முதன்மையாக செய்யத்தக்கதாக ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஸதகாவை கூறியுள்ளார்கள்.

தேவை உடையவர்கள், ஏழைகள், ஒன்றுமில்லாதவர்களின் பசியையும் நிர்வாணத்தையும் போக்குவதற்கு சதகா செய்ய வேண்டும்.

ஒரு ஹதீஸில் வருகிறது. ஹஸ்ரத் ஆயி–ா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு ஆட்டை அறுத்தார்கள். அதன் மாமிசத்தை நான் ஏழைகளுக்கு விநியோகம் செய்து விட்டு, சிறிது வீட்டிலும் வைத்துக் கொண்டேன். ஆடு அறுக்கப்பட்டதில் எவ்வளவு மாமிசம் மீதமுள்ளது என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் என்னிடம் கேட்டார்கள். எல்லா மாமிசத்தையும் பங்கிட்டுக் கொடுத்து விட்டேன். ஒரு கையளவு மட்டும் மீதி உள்ளது என்று நான் கூறினேன். அதற்கு ஹஸ்ரத் நபிகள்

நாயகம் (ஸல்) அவர்கள், இந்த கையளவு மாமிசத்தைத் தவிர மற்ற அனைத்தும் மீதி தான். ஏனெனில் ஸதகா கொடுக்கப்பட்ட அதற்குத்தான் நன்மை உள்ளது என்று கூறினார்கள்.

எவர் மக்களின் நன்மைக்காக செலவு செய்வார்களோ அதுவே உண்மையில் நன்மை தரக்கூடியதாகும். அதுவே நமக்காக மிஞ்சியுள்ள பொருளாகும். இதுவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காட்டிய முன்மாதிரியாகும். அவர்களுக்கு உலகப் பொருட்களில் எந்த ஆர்வமும் இல்லை. அல்லாஹ்வின் திருப்தியே ஒவ்வொரு நொடியும் அவர்களின் அசல் நோக்கமாக இருந்தது. ஒவ்வொரு மனிதனும் அந்த உயரிய தகுதியை அடைந்து விட முடியாது. ஆனால் அந்த முன்மாதிரியை நிலைநாட்டி நீங்களும் எப்போதும் ஏழைகளை கவனத்தில் கொள்ள வேண்டும் என்ற ஒரு பாடத்தை நமக்குக் கற்றுச் சென்றுள்ளார்கள். உங்களது கவனமும் எப்போதும் அதன் பக்கமே இருக்க வேண்டும். ஏனெனில் உண்மையான லாபம் என்பது அல்லாஹ்வின் புறமிருந்து கிடைப்பதாகும்.

இவ்விஷயத்திற்கு எவ்வளவு முக்கியத்துவம் உள்ளது எனில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் சஹாபாக்கள் ஸதகா கொடுப்பதற்கு ஒருவருக்கு வாய்ப்பே இல்லை என்றால் என்ன செய்ய வேண்டும் என்று கேட்கும்போது கூட தமது கையால் உழைத்து சம்பாதிக்க வேண்டும். அதில் உங்களுக்கும் பயன் இருக்கிறது. சமுதாயத்திற்கும் பயன் இருக்கிறது. சமுதாயத்திற்கு ஒரு சுமையாக இருக்காதீர்கள். நீங்கள் சம்பாதித்தால் சமுதாயத்திற்கும் சுமையில்லை. இரண்டாவது நீங்கள் வாங்கும் கையாக இருக்கமாட்டீர்கள். மாறாக, கொடுக்கும் கையாக ஆகி விடுவீர்கள். அக்கைதான் இறைவனின் திருப்தியைப் பெறக்கூடியதாக இருக்கும்.

இங்கு மேற்கத்திய நாடுகளில் சிலருக்கு Allowance வழங்குகின்றனர். அதனை பெறுபவரும் சிந்திக்க வேண்டும். எந்த அளவுக்கு முடியுமோ வேலை செய்ய வேண்டும். சில வேளைகளில் அவர்கள் படித்த படிப்புக்கு ஏற்ற வேலை கிடைப்பதில்லை. அந்நிலையில் முடிந்த வேலையைச் செய்து எவ்வளவு சம்பாதிக்க முடியுமோ அவ்வளவு சம்பாதிக்க வேண்டும். அரசாங்கத்தின் செலவுச் சுமையை குறைக்க வேண்டும். ஒரு அஹ்மதி ஏதாவது தவறான காரணம் காட்டி அரசாங்கத்திலிருந்து இவ்வகையான Allowance, உதவித் தொகைகளை பெறுவதற்கு அனுமதியில்லை. இவ்வாறான Allowance-களைப் பெறுவது இலாபகரமான வியாபாரமாகாது. மாறாக முற்றிலும் நஷ்டமான வியாபாரம் ஆகும். இவ்வாறு பாகிஸ்தான், இந்தியா போன்ற வறிய நாடுகளில் வாழுகின்ற ஓர் அஹ்மதி முடிந்த அளவு உழைக்க வேண்டும். வாங்கும் கையாக ஆகிவிடக் கூடாது. மாறாக கொடுக்கும் கையாக இருக்க வேண்டும். சஹாபாக்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் கேட்கின்றனர். சம்பாதிக்க ஒருவரால் முடியாவிட்டால் என்ன செய்ய வேண்டும். அவ்வாறு கிடைத்தாலும் அதனைக் கொண்டு சிரமத்துடன் அவர் தனது வாழ்வைக் கழிக்க முடியுமே தவிர ஸதகா கொடுக்க முடியும் என்ற கேள்விக்கே இடமில்லையே? பிறகு என்ன செய்வது என்று கேட்கப்பட்டபோது, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், மற்றவருக்கு உதவி செய்ய பல வழிகள் உள்ளன. அதனை செய்யட்டும். தேவை உடையவருக்கு ஏதாவது வகையில் உதவலாம்; தொண்டு செய்யலாம் என்று கூறினார்கள்.

இவ்வாறு மற்றவருககு உதவி செய்வதில் மிக உயரிய முன்னுதாரணத்தை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களே நிலைநாட்டியுள்ளார்கள். ஓர் கிழவி புதிதாக நகருக்குள் நுழைகிறார். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அக்கிழவியின் சாமான்களை சுமந்து கொண்டு வந்து உதவி செய்தார்கள். போகும் வழியில் ஹஸ்ரத் நபி (ஸல்) யார் என்று அவளுக்கு தெரியாது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் பற்றி கேள்விப்பட்ட அனைத்தையும் கூறிக் கொண்டே வந்தாள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தான் யாரென்று வெளிப்படுத்தவில்லை. அவள் சேர வேண்டிய இடத்தை அடைந்ததும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். எவரிடமிருந்து தப்பியிருக்குமாறும், எவரது மந்திர வித்தைகளிலிருந்து விலகியிருக்குமாறும் உமக்கு ஆலோசனை கூறப்பட்டதோ அது நான் தான் என்று கூறினார்கள். உடனே அக்கிழவியின் வாயிலிருந்து அவளையும் அறியாமல், உமது மந்திரம் இப்போது என்னிடம் பலித்து விட்டது என்று வெளி வந்தது.

ஏதாவது ஒரு வகையில் ஒருவரின் கஷ்டத்தை அகற்றி அவருக்கு நல்லது கிடைக்க முயற்சி செய்வதும் ஸதகாவிற்குரிய கூலியை தருகின்றது.

ஒருவரால் உழைத்து பிறருக்கு சதகா கொடுக்க இயலாவிட்டால் என்ன செய்வது? என்று சஹாபாக்கள் கேட்கின்றனா். அவரது சக்திகள் எல்லைக்குட்பட்டதாக இருந்தால் என்ன செய்வது? என்று கேட்கப்பட்டது. அப்போது ஹஸ்ரத் நபி (ஸல்) அவா்கள் கூறினாா்கள். எண்ணற்ற நன்மைகள் உள்ளன. அவற்றை செய்யுமாறு இறைவன் நமக்கு கட்டளை இட்டுள்ளான். அவற்றை செய்யுங்கள். அதுவே உங்களுக்கு பயன்தரக்கூடியதாக இருக்கும். தீமைகள் உள்ளன. அவற்றிலிருந்து விலகுங்கள். இதனை எல்லா ஏழைகள், பணக்காரா்களாலும் செய்ய இயலும். இதற்கு சிறிதும் செலவு செய்ய வேண்டியதில்லை. மனித சக்தியை செலவழிக்கும் தேவையும் இல்லை. பாருங்கள்! சின்னஞ்சிறு நன்மைக்கும் நமது அன்புக்குரிய இறைவன் கூலியைத் தந்துள்ளான். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவா்கள் மூலம் இறைவன் நமக்கு அதனை அறிவித்துள்ளான்.

இது பற்றியும் ஒரு ஹதீஸ் உள்ளது. மூஃமின்களின் பாதையில் உள்ள சிரமங்களை அகற்றுவதற்காக ஒரு மரத்தின் கிளை வெட்டியதற்காகவும் அம்மனிதனை அல்லாஹ் சொா்க்கத்தில் நுழைத்து விட்டான். எனவே நன்மை செய்வதற்குரிய கூலியை இறைவன் எப்படி தருகிறான். அதனை மனிதன் கற்பனை கூட செய்து பாா்க்க இயலாது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவா்கள் கூறுகின்றாா்கள்:**

மனிதனுக்கு இரு விஷயங்கள் மிக அவசியமானவை. ஒன்று, தீமையிலிருந்து விலகுவது. மற்றொன்று, நன்மையின் பக்கம் விரைவது. நன்மைக்கு இரு அம்சங்கள் உள்ளன. ஒன்று தீமையை விடுவது, இன்னொன்று நன்மையைப் பாதுகாப்பது. அதாவது நன்மையிலிருந்து பயனடைவது, தீமையை விடுவது கொண்டு பயனடைவதில்லை. எதுவரை அத்துடன் நன்மையை பாதுகாத்தல் என்ற அம்சம் இல்லையோ அதுவரை மனிதன் முழுமையடைய முடியாது. அதாவது மற்றவருக்கு நன்மை செய்ய வேண்டும். இந்த தகுதியை மனிதன் அடைவதற்கு இறைவனது பண்பின் மீது மனிதனுக்கு ஈமானும் இல்மும் இருந்தாக வேண்டியது அவசியமாகும். அதுவன்றி மனிதன் தீமைகளிலிருந்து தப்ப இயலாது. மற்றவருக்கு நன்மை செய்வது பெரிய விஷயமாகும். அரசா்களின் மீது கொண்ட பயத்தின் காரணத்தால் சிலா் சட்டமீறலை செய்வதில்லை. பிறகு நீதிபதிகளுக்கெல்லாம் பெரிய நீதிபதியாகிய அஹ்கமுல் ஹாகிமீனின் சட்டத்தை மீறுவதற்கு எப்படி துணிச்சல் ஏற்படுகிறது.

அல்லாஹ்வின் பண்புகளைப் பற்றி அறிவு மனிதனுக்கு இருந்தால் அவனது கட்டளைகளின்படி அமல் செய்வாா். மற்றவருக்கு நன்மை செய்வது ஒருபுறம் இருக்கட்டும். சிலா் அல்லாஹ்வின் ஏவல் விலக்கல் கட்டளைகளின் பக்கம் கவனம் செலுத்துவதில்லை. அந்த அளவுக்கு துணிச்சல் அவா்களிடம் ஏற்பட்டு விடுகிறது. அல்லாஹ் தடுத்ததை துணிச்சலுடன் செய்கின்றனா். ஒரு உலகியல் அரசுக்கு மனிதன் எவ்வளவோ பயப்படுகிறான்!

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவா்கள் கூறுகின்றாா்கள்:**

பெரும்பாலாா் அரசின் சட்டத்தை மீறுவதில்லை. பிறகு அஹ்கமுல் ஹாகிமீனின் கட்டளையை மீறும் தைரியம் மட்டும் அவா்களுக்கு எவ்வாறு வருகிறது? இதற்கு அவா்களிடம் அல்லாஹ்வின் மீது ஈமான் இல்லை என்பது தவிர வேறு காரணம் இருக்க முடியுமா? பிறகு தமது அறிவைக் கொண்டு மற்றவருக்கு நன்மை செய்ய வேண்டும் என்ற கட்டளை.

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

ஒருவரிடம் அறிவு இருந்தால் அது உலகியல் அறிவாக இருந்தாலும் சரி, மார்க்க அறிவாக இருந்தாலும் சரி, மற்றவருக்கு அதிலிருந்து பயனடையச் செய்ய வேண்டும். அதனால் அல்லாஹ்வின் திருப்தியைப் பெற்று பயன் பெறுவீர்கள். இறைவன் தந்த அறிவை மறைத்து வைத்தால், நான் அவருக்கு சொல்லிக் கொடுத்து அவரின் அறிவு கூடி விடக்கூடாது என்று கருதினால் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அம்மனிதரை கடுமையாக எச்சரிக்கின்றார்கள். தனது உம்மத்திற்கு போதனை செய்துள்ளார்கள். இவ்விஷயத்திலிருந்து எப்போதும் விலகியிருங்கள். மாறாக, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இவ்விஷயங்களிலிருந்து விலகியிருப்பதற்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் துஆ கற்றுத் தந்துள்ளார்கள். அன்னார் முழுமையான மனிதராக இருந்தார்கள். அவர்களது ஒவ்வொரு நொடியும், மூச்சும் மற்றவரின் பயனுக்காகவே இருந்தது. அன்னார் சஹாபாக்களுக்கு முன்னால் இந்த துஆவை செய்து வந்தார்கள். உண்மையில் பிறருக்கு கற்பித்தார்கள். எப்போதும் இவ்வாறு துஆ செய்யுங்கள். எனது உம்மத் இத்தகைய துஆவை தம்மிடம் வழக்கமாக்கிக் கொள்ள வேண்டும் என்று விரும்பினார்கள். உண்மையான இலாபம் இறைவனின் திருப்தியைப் பெறுவதில் தான் இருக்கிறது. அன்னாரின் துஆக்களில் இரு துஆக்களை எடுத்து வைக்கின்றேன்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அம்ர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். **ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

அல்லாஹ்வே! உனக்கு பயப்படாத உள்ளத்தை விட்டும், உன்னால் ஒப்புக் கொள்ளப்படாத துஆவை விட்டும், பண்படாத உள்ளத்தை விட்டும், பயன்படாத கல்வியை விட்டும் நான் உன்னிடம் அடைக்கலம் தேடுகிறேன். இந்த நான்கு விஷயங்களிலிருந்து உனது பாதுகாப்பில் வருகின்றேன்.

பிறகு ஒரு ரிவாயத் உம்மே ஸல்மா அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் சுபுஹ் தொழுது விட்டால் ஸலாம் கூறி தொழுகை முடித்ததும் இவ்வாறு துஆ செய்வார்கள்.

**அல்லாஹும்ம இன்னீ அஸ்அலுக இல்மன் நாஃபிஅன் வரிஸ்கன் தய்யிபன் வஅமலன் முதகப்பலன்** – அல்லாஹ்வே உன்னிடம் பயனுள்ள கல்வியையும், தூய்மையான உணவையும், ஒப்புக்கொள்ளப்படத் தகுதியான அமலையும் உன்னிடம் வேண்டுகிறேன். எனவே தம்மை பயனுள்ளவராக ஆக்குவதற்கு நற்செயல்களுடன் இறைவனின் உதவியும் தேவை. அல்லாஹ்வே! ஷய்த்தானிடமிருந்து மனிதனைக் காப்பாற்றுகிறான். அல்லாஹ்வுடைய உதவி கிடைப்பதற்கு அவனது அன்பிற்குரிய அடியாரின் மூலமாக துஆ கேட்க வைப்பதும் ஒரு வழியாகும். நாம் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் முன்மாதிரியின்படி அமல் செய்வதற்கு முயற்சி செய்யும்போது தான் இது நடக்கும். மேலும் அப்போது நமது அமல் பிறருக்கு நன்மை பயக்கும் அமலாகவும் ஆகும்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கற்றுத் தந்த இன்னொரு துஆ. ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் யஸீத் அன்சாரி அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தமது துஆவில் கீழ்க்கண்ட வார்த்தைகளைப் பயன்படுத்தினார்கள். அல்லாஹ்வே! எனக்கு உனது அன்பை வழங்குவாயாக! நீ யாருக்கு உன் புறமிருந்து நன்மையையும் இலாபத்தையும் வழங்கினாயோ அவரது அன்பை எனக்கு தருவாயாக. அல்லாஹ்வே! நீ எனக்கு வழங்கியதில் உனக்கு மிகவும் பிடித்தமானதை எனது ஆற்றலை வளர்க்கும் மூலப்பொருளாக ஆக்குவாயாக. உனக்கு பிடித்தமான பொருளிலிருந்து எனக்கு உணவு வழங்குவாயாக. நீ விரும்புவதை எனது விருப்பத்திற்குரிய பொருளாக ஆக்குவாயாக!

உலகில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைவிட இறைவனுக்கு பிரியமானவர் எவரும் இல்லை. எனவே அவர்கள் (காட்டிய வழிமுறையின்) மூலமாகவே துஆ கேட்க வேண்டும். அல்லாஹ்வின் அன்பிற்குரியவர் நமது அன்பிற்குரியவராக வேண்டும். அவர்கள் மூலமாகவே நாமும் அவர்கள் எதனை நிலைநாட்டுவதற்காகவும் பரப்புவதற்காகவும் வந்தார்களோ அதனை செய்யும் நல்வாய்ப்பினை பெற முடியும்.

மனிதன் பயனுள்ளவனாக இருப்பதற்கு திருக்குர்ஆனில் வழிகாட்டல் இவ்வாறு உள்ளது. **லன் தனாலுல்பிர்ர ஹத்தா துன்ஃபிகூ மிம்மா துஹிப்பூன்** – நீங்கள் உங்களுக்கு விருப்பமான பொருள்களிலிருந்து, (இறைவனுக்காகசி) செலவு செய்யாத வரையில் உங்களால் ஒருபோதும் முழுமையான நன்மையினைப் பெற முடியாது. (3:93)

**இதனை விளக்கியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

உலகில் மனிதன் பொருளின் மீது அதிகமான நேசம் கொள்கிறான். எனவே கனவு விளக்க நூலில் எழுதப்பட்டுள்ளது. ஒருவர் கனவில், எவராவது தமது கல்லீரலை எடுத்து தருவதாக கண்டால், அதற்குப் பொருள் செல்வம் என்பதாகும். இதன் காரணத்தால்தான் உண்மையான இறையச்சம், ஈமான் பெறுவதற்கான வழியாக – இறைவன் கூறினான். **லன் தனாலுர் பிர்ர ஹத்தா துன்ஃபிகூ மிம்மா துஹிப்பூன்** – உங்கள் பிரியமான பொருளை செலவு செய்யாதவரை நீங்கள் உண்மையான நன்மையை ஒருபோதும் பெறமாட்டீர்கள்.

எனவே, இறை திருப்தியைப் பெறுவதற்காக மிகப்பெரும் வழியாக பொருள் தியாகம் உள்ளது. ஏனெனில் இறைபடைப்பினங்களின் மீது அனுதாபம் காட்டுவது ஈமானின் மற்றொரு அங்கமாக விளங்குகிறது. அதுவன்றி ஈமான் உறுதியாவதில்லை. எதுவரை மனிதன் தன்னை விட பிறரது நலனுக்கு முன்னுரிமை வழங்குவதாக உறுதி எடுக்கவில்லையோ அதுவரை அவன் அடுத்தவருக்கு எப்போது பயன்படப் போகிறான்? மற்றவருக்கு பயன்படவும், அனுதாபம் காட்டவும், இந்த பிறர் நலத்திற்கு முன்னுரிமை வழங்கும் ஈஸார் என்ற பண்பு மிகவும் அவசியமாகும். **லன் தனாலுர் பிர்ர ஹத்தா துன்ஃபிகூ மிம்மா துஹிப்பூன்** என்ற வசனத்தில் இந்த ஈஸார் என்னும் தன்னலத்தை விட பிறர் நலனுக்கு முன்னுரிமை வழங்கும் பண்பு பற்றியே கூறப்பட்டுள்ளது.

அல்லாஹ்வின் வழியில் பொருளை செலவழிக்கும் நல்வாய்ப்பு கிடைப்பது தக்வாவின் உயர் தகுதியை வழங்குவதாகும். ஹதீஸ்களில் மற்றவருக்கு நன்மை செய்வதற்காக சதகா கொடுக்குமாறு கூறப்பட்டுள்ளது. எப்போது மனிதன் தியாகம் மற்றும் பிறர் நலன் பேணுவதன் பண்பை புரிகின்றானோ அப்போதுதான் அதனை அமல் செய்ய வாய்ப்பு கிடைக்கும். அதுவும் அசல் நிலையில் அமல் செய்வதற்கு அல்லாஹ் மற்றும் அவனது ரஸூலிடம் முஹப்பத் இருக்க வேண்டும். அதனைப் பெறுவதற்கே ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் நமக்கு துஆ கற்றுத் தந்துள்ளார்கள். அதனையே மேலே நான் விளக்கி வந்தேன். அல்லாஹ்வின் அன்பிற்குரியவரின் அன்பை தேடுங்கள். நஃபஅ என்பதன் அகராதிப் பொருளை விளக்கும் போது கூறினேன். அன்நாஃபிஃ என்பது அல்லாஹ்வின் பெயர்களுள் ஒரு பெயராகும். அப்பண்பு தான் தனது அடியார்களுக்கு விரும்பும் அளவுக்கு பயனடைய வைக்கிறது. அப்பண்புதான் நஃபஅ மற்றும் கைர் – ஐ உருவாக்குகிறது. எனவே மனிதனும் இறைவன் விரும்பும் அளவுக்கு பெறுபவனாகவும் பிறருக்கு பயன் தருபவனாகவும் விளங்க வேண்டும். எனவே ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தனது உம்மத்திற்கு, மனிதனுக்கு பயன் தருபவனாக இருங்கள் என்று அறிவுரை வழங்கினார்கள்.

அல்லாஹ்விடமே உதவி வேண்டி பயனுள்ள பொருளாக மாற முயற்சி செய்யுங்கள். உண்மையான பயனுள்ள ஓர் இருப்பு அல்லாஹ்வின் இருப்பேயாகும். அதன் வெளிப்பாடு மனிதனின் தகுதிற்கேற்ப ஏற்படுகிறது. அல்லாஹ் திருக்குர்ஆனில் தெளிவாக கூறிவிட்டான். உண்மையான ஒரு மூஃமினுக்கு உண்மையான பயன் என் மூலமாகவே கிடைக்க முடியும். என் முன்னால் குனியுங்கள். ஒவ்வொரு நொடியும் என்னை நினைவு கூறுங்கள். குர்ஆன் கரீமில் மற்ற இடங்களிலும் இது விளக்கப்பட்டுள்ளது.

ஓரிடத்தில் கூறுகின்றார்கள்: **கால அஃபதஃபுதூன மின் தூனில்லாஹி மாலா யன்பவு பிஷய்யின்** உங்களுக்கு சிறிதும் நன்மை செய்ய இயலாத ஒன்றையா நீங்கள் அல்லாஹ்வுக்குப் பதிலாக வணங்குகிறீர்கள்? **வலா யளுர்ருஹும்** அல்லது உங்களுக்கு சிறிதும் தீங்கிழைக்கவும் அவற்றால் இயலாது. (21:67)

எனவே, அல்லாஹ்வின் இருப்பே பயன்தரக்கூடியது உலகிலும் சரி, ஆகிரத்திலும் சரி. சில ஷிர்க்குகள் வெளிப்படையாக நடக்கின்றன. சிலர் இலைகளுக்கு பூஜை செய்கின்றனர். அவை மனிதனின் கைகளால் செய்யப்பட்டவை. அவை மனிதனுக்கு உதவியும் செய்ய முடியாது. தீங்கும் இழைக்க இயலாது.

எனவே வெளிப்படையாக ஷிர்க் எல்லாருக்கும் தெரியும். சில மறைமுகமான ஷிர்க்குகள் உள்ளன. சிலர் கஷ்டமான சூழ்நிலையில் உள்ள காரணிகளிடம் அளவுக்கு அதிகமான கவனமும் தேடலும் காட்டுகின்றனர். மேலதிகாரிகளை மகிழ்ச்சியடையச் செய்கின்றனர். ஆனால் அல்லாஹ்வின் திருப்தியில்லையாயின் உலக காரணிகள் ஒன்றும் செய்ய இயலாது.

ஒரு மனிதர் ஒரு சம்பவத்தை கூறுகிறார். அவர் வேலை தேடிக் கொண்டிருந்தார். ஒருநாள் அவரது நெருங்கிய உறவினர் ஒருவருக்கு இவர் வேலை தேடுகிறார் என்று தெரிந்தது. அவர் நன்றாக படித்தவர். எனவே அந்த உறவினர் சொன்னார். எனக்கு ஒரு அதிகாரியை தெரியும். நாளை என் வீட்டிற்கு வாருங்கள். அவரது வீட்டிற்கு செல்வோம். சுருக்கமாக அவர் சந்திக்கச் சென்ற போது அதிகாரி கூறினார். சரி, நாளை அலுவலகத்திற்கு வாருங்கள். ஒரு வேலை காலியாக உள்ளது. அதனை உங்களுக்கு தருகிறேன். காலையில் நான் சைக்கிளில் அந்த அலுவலகத்திற்கு போய் பார்த்த போது வாசல் கதவு அடைக்கப்பட்டிருந்தது. நான் காவலாளியிடம் இந்த அதிகாரி என்னை கூப்பிட்டுள்ளார். அவரை சந்திக்க வந்துள்ளேன் என்று கூறினேன். இதனை அந்த வேலை தேடுபவர் மிகவும் பெருமையுடன் காவலாளியிடம் தெரிவித்தார். இந்த அதிகாரி கூறியதால் நான் வந்துள்ளேன். எனவே கதவை திற. நான் அவரை சந்திக்க வேண்டும். காவலாளி கூறினார்: அந்த அதிகாரி காலையில் அலுவலகம் வரும் முன்பே Heart Attack ஏற்பட்டு மரணித்து விட்டார். இறைவனை விட்டு மற்றவரை சார்ந்து நிற்பதில் உள்ள குறைபாடு இதுவாகும். அதுபோன்ற நம்பிக்கைகளை சிலவேளை இறைவன் உடைத்து விடுகிறான். அம்மனிதர் கூறுகிறார். மிகவும் நிராசையுடன் வீடு திரும்பினேன். மனிதனை இறைவனாக்கும் போது இந்த நிலைதான் ஏற்படுகிறது. அல்லாஹ் கூறுகிறான். உண்மையில் என் பக்கம் திரும்புங்கள். நானே உங்களுக்கு நன்மையைத் தருவேன். உங்கள் நலனிற்காக செயல்படக்கூடியவன். உங்களுக்காக எல்லா ஏற்பாடுகளும் செய்ய சக்தி பெற்றவன் ஆவேன்.

ஓரிடத்தில் கூறுகின்றான்: இவ்வுலகம் தற்காலிகமானது. எப்போதும் நாம் ஆகிரத்து குறித்து கவலைப்பட வேண்டும். ஆகிரத்தின் வாழ்வையே பொருட்படுத்த வேண்டும். எல்லா நன்மையும் நஷ்டமும் ஆகிரத்தில் வெளிப்பட்டு நம் முன்னால் வரவிருக்கின்றன.

யவ்ம லா யன்ஃபவு மாலன் வலா பனூன் இல்லா மன் அதல்லாஹ பிஅல்பின் சலீம் (29:89,90) - அந்நாளில் உங்கள் பொருளும் பயன் தராது. அல்லது ஆண் மக்களும் பயன்படப்போவதில்லை. அல்லாஹ்வின் முன் பணிவான உள்ளத்துடன் வருபவர்களைத் தவிர.

எனவே அல்லாஹ்வுக்கு இபாதத் செய்யாமல் அவன் கூறிய நன்மைகளை செய்யாமல் பொருள் மற்றும் குழந்தைகளிடம் மகிழ்ச்சியடைய வேண்டியதில்லை. ஏனெனில் அவை பயன் தராது. இறைவன், உங்களிடம் எவ்வளவு பொருளை விட்டு வந்தீர்கள். அல்லது எத்தனை குழந்தைகளை விட்டு வந்தீர்கள் என்று கேட்கமாட்டான். உங்கள் நன்மைகளே பயனளிக்கும்.

ஹதீஸில் வருகிறது. **ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்** கூறுகின்றார்கள்:

ஒரு மரத்தின் கிளை பாதையை மூடியிருப்பதை அகற்றியதற்காக ஒருவரை அல்லாஹ் மன்னித்து விட்டான். ஜன்னத்தில் நுழையச் செய்தான். ஆம்! குழந்தைகள் பயன் தரும். எந்த குழந்தைகள் நன்மையில் நிலைநின்று பெற்றோரின் நன்மைகளை தொடரச் செய்யுமோ அந்த குழந்தைகள் பயன்தரும். அந்த குழந்தைகள் பெற்றோருக்கு ஒவ்வொரு வினாடியும் ஆகிரத்தில் பயன் தருகின்றன. எனவே இறைவன் கூறுகின்றான். பணிவான உள்ளத்துடன் என்னிடம் நீங்கள் வருவீர்கள் எனில் அதுவே உங்களுக்கு பயன் அளிக்கும். அல்லாஹ்வின் இபாதத்தின் பக்கம் கவனம் வேண்டும். அதுவே மனிதப் பிறப்பின் நோக்கமாகும்.

அத்தகைய உள்ளத்தை எடுத்துக் கொண்டு வந்தால் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவீர்கள். அடியாருக்கு செய்யும் கடமைகளை நிறைவேற்றக் கூடிய உள்ளத்தை எடுத்துக் கொண்டு வந்தால் அந்த பயன் தருபவன் என்ற பண்பிலிருந்து பயன் பெறுவீர்கள்.

அகராதிப்படி கல்பே ஸலீம் என்றால் முழுமையான முறையில் அல்லாஹ் அல்லாதவற்றின் கலப்படத்திலிருந்து தூய்மையாகி விட்ட உள்ளம் ஆகும். பிறகு ஈமானின் பலவீனத்திலிருந்து அவ்வுள்ளம் தூய்மையாக இருக்கும். பிறகு அவ்வுள்ளம் எல்லா விதமான தடுமாற்றத்திலிருந்தும் தூய்மையாக இருக்கும். பிறருக்கு கஷ்டம் தரும் என்பவற்றிலிருந்து தூய்மையானதாக இருக்கும். நல்லொழுக்க குறைபாட்டில் இருந்து தூய்மையாக இருக்கும். அவ்வுள்ளமே கல்பே சலீம் ஆகும். சிலரின் கருத்தின்படி கல்பே சலீம் என்பது மற்றவருக்காக வேதனைப்படும் உள்ளம் ஆகும். இறைவன் கூறுகிறான். எனக்கு இபாதத் செய்பவர் நன்மை செய்பவர். எனது திருப்தியின் சொர்க்கத்தில் நுழைவார். அதில் எப்போதும் இருந்து கொண்டிருப்பார். அல்லாஹ் நமக்கு அத்தகைய உள்ளத்தை வழங்குவானாக. நாம் நன்மை செய்து அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுபவராவோமாக.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய ஒரு மேற்கோள் எடுத்து வைக்கிறேன். அதில் அவர்களுக்கு ஜமாஅத் மக்களிடம் என்ன எதிர்பார்ப்பு விருப்பம் இருந்தது? என்பது அவர்களின் அந்த துஆவில் இருந்து தெரிய வருகிறது. அன்னார் கூறுகிறார்கள். நான் ஒரு நிலைமையைக் காண்கிறேன். அதனைக் கண்டு துஆ செய்ய தூண்டுதல் பெறுகிறேன். அது நான் எந்த மனிதனை மார்க்க தொண்டு செய்பவர் என்று அறிகிறேனோ, அவரது இருப்பு அல்லாஹ், ரஸூல் அவனது வேதம் அவனது அடியார் ஆகியவர்களுக்கு பயனுள்ளதாக இருப்பதாக அறிந்தால் அவருக்கு ஒரு கஷ்டம் வந்தால் உண்மையில் அக்கஷ்டம் எனக்கு வருகிறது.

பிறகு கூறினார்கள்: எனது நண்பர்கள் தமது உள்ளத்தில் மார்க்க சேவை செய்யும் எண்ணத்தை ஏற்படுத்துங்கள். எவ்வளவு முடியுமோ செய்யுங்கள். மேலும் கூறினார்கள். நான் உண்மையாகவே கூறுகிறேன். மார்க்கத்திற்கு சேவை செய்பவர்; மனிதருக்கு பயனளிப்பவரின் கண்ணியம் இறைவனிடம் மிக உயர்ந்தது. அதுவன்றி இறைவன் நாய்கள் மாடுகளைப் போன்று வாழ்பவர்களை பொருட்படுத்துவதில்லை. அல்லாஹ் நம்மை இத்தகுதி பெறுபவர்களாக்குவானாக. குர்ஆன், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்ளின் சுன்னத்தின் ஒளியில் நம்மிடம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எதிர்பார்க்கும் அமல் நம்மிடம் உருவாகட்டுமாக! ஆமீன்.

★ ★ ★ ★ ★

JUMUA KUTHBA
HADHRAT KHALIFATUL MASIH V
AT BAITUL FUTUH MOSQUE, LONDON
ON 24.04.2009

Translated by : **Muallim M. NIZAMUDEEN**

Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**